அசல் வழக்கு எண்: 94/2025

DEPOSITION OF WITNESS: P.W.1

| | |
|---|---|
| பெயர் | சசிகலா |
| கணவர் பெயர் | செல்வம் |
| வயது | 51 |
| கிராமம் | மேல்மலையனூர் |
| வட்டம் | செஞ்சி |
| தொழில் | இல்லத்தரசி |

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 22nd day of January 2026

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்திற்கு நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். 09.01.2011ம் தேதியிட்ட வாதிக்கு காலம் சென்ற சி.ஏழுமலை அசல் ரூ.5,00,000/- பிரதிபலனுக்கு எழுதிக்கொடுத்த கடனுறுதி சீட்டு அசல் **வா.சா.ஆ.1** ஆகவும் 10.06.2013ம் தேதியிட்ட வாதி 1, 2 பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.2** ஆகவும் 1,2 பிரதிவாதிகளின் அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.3** ஆகவும் 21.06.2013ம் தேதியிட்ட வாதி வழக்கறிஞருக்கு 1, 2 பிரதிவாதிகள் அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.4** ஆகவும் 01.03.2005ம் தேதியிட்ட காலம் சென்ற பாண்டுதாரர் சி.ஏழுமலை கட்டியுள்ள மெத்தைவீடு, தனிப்பட்ட முறையில் கிரயம் பெற்ற காலிமனை கிரைய பத்திர கணினி பதிவிறக்க சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆகவும் 18.11.2020ம் தேதியிட்ட காலம் சென்ற பாண்டுதாரரின் 1/8 பாக உரிமை ( 1/8 share in acre 2.43 ( Hr.0.98.50) நிலங்களின் சிட்டா கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.6** ஆகவும் 18.11.2020ம் தேதியிட்ட மேற்படி கிரைய மனையின் Guideline மதிப்பு சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.7** ஆகவும் நவம்பர் 2020 விளை நில Guideline மதிப்பு சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்ய வேண்டுகிறேன். பிராதுப்படி தீர்ப்பளிக்க பிரார்த்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை** –

பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க ஒத்திவைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |